DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO.133/2022

Deposition of LW7 examined as PW6 Date: 19.09.2025

| | |
|---|---|
| Name | தினேஷ் |
| Father's/Husband's Name | ரவி |
| Village | திருவிழந்தூர் |
| Taluk | |
| Age | 22/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 19.09.2025

(Accused absent. Petition u/s.355 BNSS filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து டிரைவராக பணி புரிந்து வருகிறேன். அ.சா.1 முதல் 5 வரையிலானவர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் நான் மயிலாடுதுறையில் ஹிந்துஸ்தான் ஏஜென்சியில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அந்த கையெழுத்தினை போலிசார் காவல் நிலையம் வரச்சொல்லி அ.சா.1 க்கும் எதிரிக்கும் நடந்த சண்டை சம்பந்தமாக பெற்றக்கொண்டதாக கூறினார்கள். நான் கையெழுத்து செய்த மாதம், தேதி, வருடம் எனக்கு ஞாபகத்தில் இல்லை.
போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சி பகுதி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 11.10.2021 ம் தேதி 19.35 மணியளவில் அ.சா.1 க்கும், எதிரிக்கும் சண்டை நடந்தது என்றும், அதை நான் கேள்விப்பட்டேன் என்றும், மேற்படி வழக்கு சம்பந்தமாக போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து என் முன்னிலையில் பார்வை மகசர் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில் நான் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சம்பவங்களில் எனக்கு போலிசார் கூறியதன் அடிப்படையில் அ.சா.1 க்கும் எதிரிக்கும் சண்டை நடந்ததை கேள்விப்பட்டேன் என்றால் சரிதான். மேற்படி சம்பவங்கள் முழுவதையும் போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னிடம் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கிய பேப்பரில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கடையில் வேலை பார்த்து கொண்டிருந்தபோது போலிசார் என்னை அழைத்து கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். என்னுடன் வேறு யார் கையெழுத்து செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது.